தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.13

# Anangavisalanai's Dream in Udayanakumara Kavyam

**K. Selvakamatchi*, Dr. N. S.K. Sangeethradha,**
[1]PhD Research Scholar, Tamil Advanced Research Centre,
Thiagarajar College, Madurai – 09
[2]Research Guide, Assistant Professor, Tamil Advanced Research Centre,
Thiagarajar College, Madurai – 09
*Corresponding Author Email: karthikeyan.sh@sritcbe.ac.in.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

## ABSTRACT

The purpose of this research article is to compare and examine the dream of Anangavisalanai, which occurs in the Udayanakumara Kavyam, on the basis of Carl Gustav Jung's psychological theory. According to Jung, dreams serve as symbolic expressions of the unconscious mind. Based on this theory, the symbols occurring in Anangavisalanai's dream—such as the lion cub, cave, silver mountain, pearl necklace, flower garland, and the earthly world—are explained from a psychological perspective. Specifically, the lion cub is analyzed as a symbol of the animus, the cave as a symbol of the unconscious mind, the silver mountain as a symbol of elevation and life transformation, and the pearl necklace and flower garland as symbols of married life and feminine identity. Furthermore, it is explained that this dream serves as a symbolic expression of Anangavisalanai's future life, mental preparation, and inner psychological growth. Through this, this study demonstrates that dreams appearing in Tamil epics go beyond just predicting the future and serve as a literary technique that reveals the inner world and psychological state of the characters.

**Keywords:** *dayanakumara Kavyam, Carl Jung, Dream Psychology, Tamil Literature, Literary Symbolism.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI:* *https://doi.org/10.63300/tm12022026*

# உதயணகுமார காவியத்தில் அநங்கவிசாலனையின் கனவு

**[1]கா.செல்வகாமாட்சி,**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்,
தியாகராசர் கல்லூரி, மதுரை –09
**[2]முனைவர்.ந.செ.கி.சங்கீத்ராதா,**
நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்உயராய்வு மையம்,
தியாகராசர் கல்லூரி, மதுரை – 09

**ஆய்வுச் சுருக்கம்**

உதயணகுமார காவியத்தில் இடம்பெறும் அநங்கவிசாலனின் கனவை, கார்ல் குஸ்டவ் யூங்கின் **(Carl Gustav Jung)** உளவியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஒப்பிட்டு நோக்குவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம்

யூங்கின் கருத்துப்படி கனவுகள் நனவிலி மனத்தின் குறியீட்டு வெளிப்பாடுகளாக அமைகின்றன. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அநங்கவிசாலனையின் கனவில் இடம்பெறும் சிங்கக்குட்டி, குகை, வெள்ளிமலை, முத்துமாலை, மலர்மாலை மற்றும் நிலவுலகம் ஆகிய குறியீடுகள் உளவியல் நோக்கில் விளக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சிங்கக்குட்டி அனிமஸ் குறியீடாகவும், குகை நனவிலி மனத்தின் குறியீடாகவும், வெள்ளிமலை உயர்வு மற்றும் வாழ்க்கை மாற்றத்தின் குறியீடாகவும், முத்துமாலை மற்றும் மலர்மாலை மணவாழ்க்கை மற்றும் பெண்ணிய அடையாளத்தின் குறியீடுகளாகவும் ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், இக்கனவு அநங்கவிசாலனின் வருங்கால வாழ்க்கை, மனத் தயாரிப்பு மற்றும் உள்மன வளர்ச்சி ஆகியவற்றின் குறியீட்டு வெளிப்பாடாக அமைகிறது என்பதும் விளக்கப்படுகிறது. இதன் மூலம் தமிழ் காப்பியங்களில் இடம்பெறும் கனவுகள் வெறும் வருமுன் உரைத்தல் என்ற நிலையைக் கடந்து, பாத்திரங்களின் அகஉலகத்தையும் உளவியல் நிலையையும் வெளிப்படுத்தும் இலக்கிய உத்தியாக விளங்குகின்றன என்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது.

**முன்னுரை**

மனித வாழ்க்கையை விளக்குவதாக கனவுகள் அமைகின்றது. அதனையே அறிவியல் முறையில் விளக்குவதாக உளவியல் அமைகின்றது. கனவுகள் இலக்கியங்களில் முக்கிய பங்காற்றுகின்றன. குறிப்பாக காப்பியங்களில் வரும் முன் உரைத்தல் உத்தியாக கனவுகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

பண்டைய காலம் முதலே கனவுகள் எதிர்கால நிகழ்வுகளுக்கான அறிகுறிகளாகவும் தெய்வீக செய்திகளாகவும் கருதப்பட்டு வந்துள்ளன. உளவியல் கனவுகளை நனவிலி மன வெளிப்பாடாகவே கருதுகின்றது. உளவியல் ஆய்வாளர்களில் குறிப்பிட்டத்தக்க ஒருவரான **கார்ல்**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

**கஸ்டவ் யூங் (Carl Gustav Jung)** கனவுகள் குறியீடுகள் வாயிலாக நனவிலி மன செய்திகளை வெளிப்படுத்துகின்றன என்று கருதினார்.

உதயணகுமார காவியத்தில் இடம்பெறும் அநங்கவிசாலனையின் கனவு உதயணகுமார காப்பியத்தில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் இடமாக உள்ளது. பல்வேறு குறியீடுகளை உள்ளடக்கிய இக்கனவு பல்வேறு உளவியல் அர்த்தங்களையும் கொண்டுள்ளது. எனவே இக்கட்டுரையானது யூங்கின் கனவு கோட்பாட்டின் அடிப்படையில் அநங்கவிசாலனையின் கனவை ஆராய்ந்து அதன் உளவியல் பரிணாமங்களை விளக்குவதாக அமையப் பெறுகின்றது.

**காவியத்தின் பின்னணி**

உதயணகுமார காவியம் உதயணனின் பிறப்பு, வெற்றி சிறப்பு முதல் துறவறம் மேற்கொண்டு கேவலஞானம் அடையும் நிகழ்வு வரை சுட்டுகிறது. மேலும் உதயணனின் மகனாகிய நரவாகனனின் பிறப்பு முதல் துறவறம் வரை உள்ள செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

இந்நூலினை படிப்பதினால் கிட்டும் பயனானது தீவினைகளை நீக்கி நல்வினைகள் பெருக்கும் என்றும் உடலில் சேர்ந்த நோய்களும் தீவினைகளும் படிப்படியாக குறையும் என்றும் இந்நூலின் தொடக்கத்தில் சுட்டப்பட்டுள்ளது.

இந்நூலின் காலம் கி.பி.15 ஆம் நூற்றாண்டு என்று மது.ச.விமலானந்தம் அவர்களால் குறிக்கப்படுகின்றது. இதில் பல்வேறு கருத்து வேறுபாடுகளும் உண்டு. சமண சமயத்தைச் சார்ந்த உதயணகுமார காப்பியமானது ஆறு காண்டங்களைக் கொண்டு திகழ்கின்றது. பெருங்கதை முழுமையாக கிடைக்க பெறாத நிலையில் பெருங்கதையின் சுருக்கமாக இது திகழ்கின்றது. மேலும் ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றாகவும் இது அமைந்துள்ளது.

இக்காப்பியத்தில் இடம் பெறும் அநங்கவிலாசனை என்னும் கதைமாந்தர் வித்யாதார உலகத்தினை சார்ந்த கந்தருவ புர மன்னன் நீலவேகன் மற்றும் அவரது மனைவி நாகதத்தையின் மகளும் ஆவாள்.

**யூங்கின் உளவியல் அணுகுமுறை**

கார்ல் கஸ்டவ் யூங் (carl Gustav Jung) சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த உளவியல் அறிஞர் ஆவார். பகுப்பாய்வு உளவியல் (Analytical psychology) என்கின்ற புதிய சிந்தனை பரப்பை உருவாக்கியவரும் ஆரம்பத்தில் ஃபிராய்டுடன் இணைந்து பணியாற்றியவரும் ஆவார்.

இவர் மனதினை மூன்று வகையாகப் பகுக்கின்றார் **“தன்முனைப்பு ( Ego), தனிமனித நனவிலியும் அதன் அமைப்பும் ( The personal unconscious and it’s Complex) கூட்டு நனவிலியும் அதன் அமைப்பும் (The collective unconscious and it’s complex) என்று மூன்று வகையாகப் பாகுபாடு செய்கிறார்” (சாரதாம்பாள்.செ., இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்., ப.எண் 13., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., சென்னை)** இவ்வாறு மூவகைப் பகுப்புகளாக

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
**www.tamilmanam.in** *DOI:* **https://doi.org/10.63300/tm12022026**

சுட்டும் யூங் மாதிரிப் படிவம் (Archetype), அனிமா (Anima), அனிமஸ் (Animus), நிழல்(Shadow) முகமுடி (persona) போன்ற புதிய கருத்துக்களை அறிமுகப்படுத்தினார்.

**"நனவை விட நனவிலி எண்ணங்களுக்கு வலிமை ஏற்படும் போதெல்லாம் இப்படி நடக்கும் அப்படித்தான் கனவுகள் உருவாகின்றன" (இரவிச்சந்திரன் தி.கு., அம்மா வந்தாள் உளப்பகுப்பாய்வு, ப.எண் 157., அலைகள் வெளியீட்டகம்., சென்னை.)** என்று குறிப்பிட்ட அவர் கனவுகளை மனிதனின் நனவிலி மனக் குறியீட்டு வெளிப்பாடுகளாக குறிப்பிட்டார். மனிதனின் ஆழமான உணர்வுகள், ஆசைகள், அச்சங்கள், எதிர்பார்ப்புகள், கனவு வழி வெளிப்படுகின்றன என்று யூங் கருதினார்.

**அநங்கவிசாலனையின் கனவு**

வித்யாதார உலகினை நரவாகனன் தன் ஆட்சிக்கு கீழ் கொண்டு வருவான் என்ற சான்றோரது வாக்கினை மெய்ப்பிக்கும் முயற்சியில் நரவாகனன் தனது தேரில் வித்யாதார நாட்டின் சித்திரலோகம் எனும் இடத்தில் உள்ள பொய்கைக் கரையில் இறங்குகின்றான்.

அப்போது வித்யாதரன் ஒருவன் நரவாகனின் அடிகளை பணிந்து வணங்கி இளவரசி அநங்கவிசாலனையின் கனவினை சுட்டி அநங்கவிசாலனையின் தந்தையாகிய மன்னன் நீலவேகன் துறவியிடம் கனவின் பலன் யாது என்று வினாவ துறவி பொய்கை கரைச் சென்று காணுமாறு கூறவே இங்கு பொய்கைக் கரை வந்தேன், கண்டேன். அதனால் என்னுடன் வந்தருள்க என்று வித்யாதரன் வித்யாதர உலகிற்கு நரவாகனை அழைத்து செல்கின்றான்.

நரவாகனை வித்யாதார உலகத்திற்கு அழைத்துச் செல்ல காரணமாக இருந்த அநங்கவிசாலனையின் கனவானது,

**"கரும்பார் நன்மொழி காதற் கனவிடை**
**விரும்பு சிங்கமீன் வீரியச் சாபந்தான்**
**பரம்பு மண்ணின்று பாங்கி னெழுந்ததே"**

**(சூளா.பா.எண் -279)**

**"அரிய முத்தணி யாரத்தைக் கவ்வியே**
**விரைசெய் மாலையை வீறுடன் சூட்டவும்"**

**(சூளா.பா.எண்- 280)**

வீரமுடைய ஒரு சிங்கக்குட்டி விரிந்த மண்ணுலகில் இருந்து தன் குகையை விட்டு எழுந்து வெள்ளி மலை மீது ஏறி வந்து தன் மார்பில் இருக்கின்ற பெறுவதற்கு அரிதான முத்துமாலையை கௌவிக் கொண்டு பின்பு மனம் வீசுகின்ற மலர்மாலையைத் தனக்குச் சூட்டியதாக அமைந்துள்ளது. இக்கனவை அநங்கவிசாலனை தனது தாயிடம் தெரிவிக்கின்றாள்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

**யூங்கின் கனவு கோட்பாடு**

யூங் சுவிட்சர்லாந்து நாட்டில் கிறித்தவ குடும்பத்தில் பிறந்தவர். தாயின் தத்துவ நாட்டம், தந்தையின் இறையியல் சிந்தனையின் தாக்கம் இரண்டும் யூங்கிடம் இருந்தது. மனித மனத்தை ஆளுமை நோக்கில், தன்முனைப்பு, தனிமனித நனவிலி, கூட்டு நனவிலி என்று பிரித்த யூங் . மனிதனின் நனவிலி மனதில் மறைந்து கிடக்கும் குழந்தைப் பருவத்திலிருந்து பெற்ற அனுபவங்கள் அமிழ்ந்து கிடப்பதை குறிப்பிடுகின்றார்.

**“மானுட இனத்தின் அனுபவங்களெல்லாம் நனவிலி மனத்தில் மறைந்து கிடக்கின்றன. இந்நிலையில் தான் யூங் தனி மனித நனவிலி, கூட்டு நனவிலி என்று பிரிக்கிறார்” (சாரதாம்பாள்.செ., இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்.,ப.எண் 14., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்)** மனிதனின் நனவிலி மனதில் மறைந்து கிடக்கும் உணர்வுகளும் எண்ணங்களும் கனவுகளாக வெளிப்படுகின்றன.

உளவியல் அறிஞர் ஃபிராய்டுடன் இணைந்து பணியாற்றி தனது தனி முயற்சியால் கூட்டு நனவிலியை கண்டறிந்தப் பின்னர், ஃபிராய்டிடமிருந்து தன்னை கொஞ்சம் கொஞ்சமாக விடுவித்துக் கொண்டார். **“அழுக்கப்பட்ட விருப்பத்தின் புனைவேட வெளிப்பாடு தான் கனவு என்பார் ஃப்ராய்ட் (ரைட், 19) யூங்கியத்தின் படி தனியர் மற்றும் கூட்டு நனவிலியின் புறத்தெறிவாகக் கனவு விளங்குகிறது. இதில் ஆதி மனநிலை வெளிப்படுவதாக யூங் கருதுகிறார்” (இரவிச்சந்திரன்.தி.கு., ஃப்ராய்ட் யூங் லக்கான் அறிமுகமும் அதற்கு அப்பாலும்., ப.எண் 228., அடையாளம் பதிப்பகம் )**

புறத்தெறிவு என்பது ஒருவரின் மன ஆற்றல் வெளிப்புற உலகை நோக்கிச் செலுத்தப்படும் ஆளுமை நிலையாகும். இத்தகையவர்கள் சமூக உறவுகள், செயல்பாடுகள் மற்றும் வெளிப்புற அனுபவங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாக விளங்குவர்.

**கனவுகளின் குறியீட்டுத் தன்மை (Symbolism)**

யூங்கின் கருத்துப்படி குறியீடு என்பது நேரடியாக சொல்ல முடியாத உள்மன அனுபவங்கள், உணர்வுகள் மற்றும் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு வடிவமாகும். நனவிலி மனம் நேரடியாக செய்தியை வெளிப்படுத்தாமல் குறியீட்டு மொழியிலே வெளிப்படுத்தும் கனவுகள் குறியீட்டு மொழியின் வெளிப்பாடுகளே ஆகும்.

**“ஒட்டு மொத்தக் கனவு ‘ஈடுகட்டுதல்’ படிமுறையிலானது என்பது தான் யூங்கின் வாதம் ஈடுகட்டுதலில் (காம்பன்சேஷன்) குறியீடுகளே பெரும் பங்கு வகிக்கின்றன” (இரவிச்சந்திரன் தி.கு., ஃப்ராய்ட் ,யூங், லக்கான் அறிமுகமும் அதற்கு அப்பாலும்., ப.எண் 226., அடையாளம் பதிப்பகம்)**

இங்கு ஈடுகட்டுதல் என்பது நனவு வாழ்வில் இல்லாத அல்லது குறைவாக உள்ள ஒரு

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

மனநிலையை கனவு ஈடு செய்து சமநிலைப்படுத்த முயற்சிக்கும் நிலையே ஆகும்.

யூங்கின் உளவியல் கோட்பாட்டில் கூட்டு நனவிலி (Collective unconscious) என்ற கருத்து மிக முக்கியமானதாகும். தலைமுறை தலைமுறையாக மனிதர்களின் மனதில் பதிந்துள்ள பொதுவான படிமங்களின் தொகுப்பே கூட்டு நனவிலியாகும். இக்கூட்டு நனவிலியில் இருந்து வீரன், தாய், ஞானி, அரசன், சிங்கம் போன்ற மாதிரிப் படிவங்கள். ( Archetypes) ஆனது தோன்றுகின்றன .

**கனவிலுள்ள குறியீடுகளின் உளவியல் விளக்கம்**

கனவுகளை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு அவற்றில் இடம்பெறும் குறியீடுகளின் உளவியல் அர்த்தங்களை ஆராய்வது அவசியமானதாகும். இவ்வாறு நோக்கையில் அநங்கவிசாலனையின் கனவு சிங்கக்குட்டி, வெள்ளிமலை, முத்துமாலை, மலர்மாலையாகிய குறியீடுகளை உள்ளடக்கியதாக உள்ளது .

இக்குறியீடுகள் ஒவ்வொன்றும் இளவரசியின் உள்மனநிலை, எதிர்பார்ப்பு மற்றும் வாழ்க்கை மாற்றத்தை வெளிப்படுத்தும் உளவியல் கூறுகளாக அமைகின்றன. இக்கனவில் அமைந்துள்ள முக்கிய குறியீடுகள் அவற்றின் உளவியல் விளக்கங்களாவன,

| வரிசை எண் | குறியீடு | உளவியல் பொருள் |
|---|---|---|
| 1. | சிங்கக்குட்டி | வீரம், ஆண் சக்தி, அனிமஸ் |
| 2. | குகை | நனவிலி மனம், மறைந்த உணர்வுகள் |
| 3. | வெள்ளிமலை | உயர்வு, வாழ்க்கை மாற்றம் |
| 4. | முத்துமாலை | பெண் அடையாளம், மதிப்பு |
| 5. | மலர்மாலை | திருமண இணைவு, காதல் |
| 6. | நிலவுலகம் | கற்பனை, இலட்சிய உலகம் |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீடுகள் ஒவ்வொன்றும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

தனித்துவமான உளவியல் அர்த்தங்களைக் கொண்டுள்ளன. அவற்றை யூங்கின் குறியீட்டுக் கோட்பாடு அடிப்படையில் பின்வருமாறு விளக்கலாம்.

**சிங்கக்குட்டி**

சிங்கம் உலகளாவிய வீரத்தின் குறியீடாக உள்ளது. இது அரசத் தன்மை, தலைமைத்துவம், ஆற்றல் ஆகியவற்றைக் குறிக்கிறது. யூங்கிய பார்வையில் அனிமஸ் ஆக திகழ்கிறது. அநங்கவிசாலனையின் கனவில் இச்சிங்கக்குட்டி வரவிருக்கும் மணவாளனின் (நரவாகனன்) குறியீடாக திகழ்கிறது.

**குகை**

குகை என்பது நனவிலி மனதின் குறியீடாக விளங்குகிறது. மனிதனின் வெளிப்படையாக அறியப்படாத எண்ணங்கள், உணர்வுகள், ஆசைகள் மற்றும் அனுபவங்கள் நனவிலி மனதில் மறைந்து இருக்கின்றன.

இந்நிலையை குகையுடன் ஒப்பிட்டு யூங் விளக்குகின்றார். குகை என்பது இருள், மர்மம் மற்றும் மறைவான உலகம் ஆகியவற்றோடு தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. எனவே கனவில் குகை தோன்றுவது மனிதனின் ஆழ் மனத்தில் மறைந்துள்ள உளவியல் கூறுகளை உணர்த்துவதாக அமைகிறது. குறிப்பாக குகையிலிருந்து சிங்கக்குட்டி வெளிப்பட்டு வருவது இளவரசியின் நனவிலி மனத்தில் மறைந்திருந்த உணர்வுகள் மற்றும் எதிர்பார்ப்புகள் வெளிப்படத் தொடங்கியுள்ளதைக் குறிக்கும் உளவியல் நிகழ்வாக விளக்கப்படலாம்.

**வெள்ளிமலை**

யூங்கின் குறியீட்டுக் கோட்பாட்டின் படி மலை என்பது உயர்வு, வளர்ச்சி, சாதனை, ஆன்மீக முன்னேற்றம் ஆகியவற்றின் குறியீடாகக் கருதப்படுகிறது.

உதயணகுமார காவியத்தில் இடம்பெறும் இளவரசியின் கனவில் சிங்கக்குட்டி வெள்ளி மலையின் மீது ஏறிச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும். இது சாதாரண நகர்வாக இல்லாமல் உயர்ந்த நிலையை நோக்கிய பயணமாகப் புரிந்துக் கொள்ளப்படுகிறது.

யூங்கின் பார்வையில் இத்தகைய உயர்நிலையை நோக்கிய இயக்கம் மனிதனின் உள்மன வளர்ச்சியையும் புதிய வாழ்க்கை நிலையை அடைவதற்கான முன்னேற்றத்தையும் குறிக்கிறது. மேலும் வெள்ளிமலை என்பது சாதாரண மலையை விட உயர்ந்த மற்றும் சிறப்புமிக்க நிலையை உணர்த்தும் குறியீடாக அமைகிறது.

இளவரசி வாழ்வில் நிகழவிருக்கும் மணவாழ்க்கை மாற்றம், புதிய உறவு மற்றும் புதிய சமூக நிலை ஆகியவற்றை வெள்ளிமலை எனும் இக்குறியீடு முன்கூட்டியே சுட்டிக்காட்டுவதாக எடுத்துக் கொள்ளலாம்.

இக்கனவில் இடம்பெறும் வெள்ளிமலை என்பது உயர்வு, மாற்றம், வாழ்க்கையின் புதிய கட்டம் ஆகியவற்றின் குறியீடாகவும் இளவரசியின் எதிர்கால வாழ்க்கைப் பயணத்தை முன்னறிவிக்கும் உளவியல் படிமமாகவும் உள்ளது.

**முத்துமாலை**

அநங்கவிசாலனையின் கனவில் வெளிப்படும் முத்துமாலையினை குறியீட்டு நோக்கில்

,| Copyright © Author(s)

ஆராய்கையில் முத்து என்பது அரியப் பொருளாகவும், தூய்மை மற்றும் மதிப்புமிக்க தன்மையை குறிப்பதாகவும் உள்ளது. முத்துமாலை இளவரசியின் அடையாளத்தையும் பெண்ணியத்தையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. அத்தகைய முத்துமாலையை மண்ணுலகிலுள்ள சிங்கக்குட்டி கௌவுவது என்பது வாழ்க்கை மாற்றத்தைக் குறிக்கும் குறியீடாக கொள்ளலாம்.

**மலர்மாலை**

மலர்மாலை என்பது தமிழ்ச்சமூகத்தில் திருமணத்தைக் குறிக்கும் முக்கியமானதொரு சின்னமாகும். இது குறியீட்டு நோக்கில் காதல் இணைவு, திருமண உறவு ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.

விசாலனையின் கனவில் வரும் மலர்மாலை பற்றிய செய்தியானது மண்ணுலகிலுள்ள சிங்கக்குட்டி தனது வாயால் இளவரசியது முத்துமாலை கவ்விக் கொண்டு மலர்மாலையை அணிவிப்பதாக அமைந்துள்ளது. இதனை இளவரசியது எதிர்கால மணவாழ்க்கை இணைவினை முன்னறிவிக்கும் குறியீடாக அமையப் பெற்றுள்ளது எனலாம்.

**நிலவுலகம்**

விண்ணுலகமாகிய வித்யாதர உலகிலுள்ள ஒரு பெண்ணுக்கு மண்ணுலகில் உள்ள இடங்கள், சிங்கக்குட்டி, குகை ஆகியவை கனவில் வருவது விண்ணுலக பெண் மனம் கற்பனை உணர்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புடையதாக உள்ளது என்பதை தெரிவிக்கின்றது.

நிலவுலகில் இருந்து சிங்கக்குட்டி வருவதாகிய கனவு மணவாளன் வருவதனுடன் தொடர்புடையது. இந்த மணவாளன் சாதாரண மனிதனாக இல்லாமல் இளவரசியின் உள்மனத்தில் உருவான இலட்சிய கற்பனை ஆண் உருவைச் சுட்டுகிறது.

இக்குறியீடுகள் அனைத்தும் ஆழமான உளவியல் அர்த்தங்களைக் கொண்ட குறியீடுகளாக அமைகின்றன. யூங்கிய குறியீட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் இத்தகைய குறியீடுகள் இளவரசியின் நனவிலி மனம், வருங்கால வாழ்க்கை பற்றிய எதிர்பார்ப்பினை வெளிப்படுத்துகின்றது.

**அனிமஸ் கோட்பாட்டின் அடிப்படையில் கனவு**

யூங்கின் உளவியல் கோட்பாடுபடி **“அனிமா என்பது பெண்ணுரு அனிமஸ் என்பது ஆணுரு இரண்டு உருக்களும் அனைவரின் ஆன்ம அடிப்படைகள் ஆகும்” (இரவிச்சந்திரன் தி.கு., அம்மா வந்தாள்;உளப்பகுப்பாய்வு., ப.எண் 184., அலைகள் வெளியீட்டகம்.,சென்னை)**

இந்த இரட்டை மூலப்படிவமங்கள் அனிமா, அனிமஸ் என்பதனைக் குறிக்கிறது. இதில் அனிமஸ் என்பதனை பெண்ணின் நனவிலி மனத்தில் காணப்படும் ஆண் மூலப்படிவத்தை குறிக்கிறது.

ஒவ்வொரு மனிதனிடமும் ஆண் அல்லது பெண்ணாக இருந்தாலும் அனிமா, அனிமஸ் இரண்டு பண்புகளும் இணைந்தே காணப்படுகிறது. .இவ்வாறு நனவிலி மனத்தில் காணப்படும் ஆண் உருவமே அனிமஸ் எனப்படுகிறது. இந்த அனிமஸ் கனவுகளில் பல்வேறு வடிவங்களில் தோன்றும் வீரன், அரசன் வழிகாட்டி, ஞானி, வலிமைமிக்க விலங்கு போன்ற பல உருவங்களில் இவை கனவில் வெளிப்படுகின்றன.

**“மூலப்படிவங்களில் காதல் சார்ந்த படிவங்கள் பெண்ணுரு-ஆணுரு எனப்படுகின்ற ‘அனிமா – அனிமஸ்’ ஆகும்” (இரவிச்சந்திரன் தி.கு., அம்மா வந்தாள்;உளப் பகுப்பாய்வு., ப.எண் 187., அலைகள் வெளியீட்டகம்.,சென்னை)**

அம்மாவை போன்ற பெண்ணை தேடும் ஆண்களும்,அப்பாவை போன்ற துனையைத் தேடும் பெண்களும் இத்தகைய அனிமா, அனிமஸ் தாக்கத்தின் விளைவாகவே இவ்வாறு நடந்து கொள்கின்றன. எனவே பெண்ணின் உள்மன வளர்ச்சியிலும், வாழ்க்கை துணைத் தேர்வுகளிலும் அனிமஸ் முக்கிய பங்கு வகிக்கின்றது எனலாம்.

இளவரசி விசாலனையின் கனவில் தோன்றும் சிங்கக்குட்டியினை அனிமஸ் கோட்பாடுடன் பொருத்திப் பார்க்க ஏற்புடையதாகும்.

சிங்கம் பொதுவாக வீரம், ஆற்றல், அரசத்தன்மை மற்றும் ஆண்மையின் குறியீடாகக் கருதப்படுகிறது. எனவே சிங்கக்குட்டி இளவரசியின் நனவிலி மனத்தில் உருவாகியுள்ள ஆண் மூலப்படிமத்தின் வெளிப்பாடாக அமைகின்றது. மேலும் மண்ணுலகிலுள்ள சிங்கக்குட்டி குகையிலிருந்து வெளிப்பட்டு வெள்ளி மலையை அடைந்து முத்துமாலையைக் கவ்வி மலர்மாலையைச் சூட்டுவது இளவரசியின் வாழ்க்கையில் நிகழவிருக்கும் மணவாழ்க்கை மாற்றத்தை உளவியல் குறியீட்டு வடிவில் வெளிப்படுத்துவதாகக் கருதலாம்

**“வாழ்வின் பருவத்துக்கு ஏற்புடைய மூலப் படிவங்களே வெளிப்படும். பிள்ளைப் பருவத்தில் விளையாட்டும் குமரப் பருவத்தில் காதலும்….. அவற்றினூடே அவை தொடர்பான மூலப்படிவங்கள் செயல்பாட்டுக்கு வரும். இது யூங்கிய மெய்மை” (இரவிச்சந்திரன் தி.கு., அம்மா வந்தாள் உளப்பகுப்பாய்வு., ப.எண் 164., அலைகள் வெளியீட்டகம்., சென்னை)**

யூங்கிய மெய்மையின் படியே அநங்க விசாலனையின் குமரப்பருவத்தே சிங்கக்குட்டி எனும் குறியீட்டை உள்ளடக்கிய மணவாளனின் வருகைப் பற்றிய கனவானது வெளிப்பட்டுள்ளன.

**இலக்கிய விளக்கம்**

அநங்கவிசாலனை தனது கனவை பற்றி தாயிடம் கூறிய பின்னர், தந்தை மற்றும் அரசனாகிய நீலவேகனிடம் அநங்க விசாலனையும் தாய் நாகதத்தை கூறுகின்றாள். அரசன் சுமித்திரன் எனும் துறவியிடம் கனவின் பலனை அறியும் பொருட்டு வினாவுகின்றான்.

துறவி கனவைக் கேட்டு மனத்தால் ஆராய்ந்து, மன்னா, நிலவுலகிலிருந்து உன் மருமகன் உன்னிடம் வருவான். மணமகனாகும் அவன் வித்யாதர உலகையும் தன்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வருவான் என்று அரசனுக்கு துறவி பதில் அளிக்கின்றார்.

இலக்கியத்திலும் அநங்கவிசாலனையின் கனவிற்கான பலன் சுட்டப்படுகிறது. இந்நிகழ்வுகளையும் அனிமஸ் கோட்பாடுடன் பொருத்தி நோக்கலாம்.

நனவிலி மனத்தில் உருவாகியிருந்த, வருங்கால வாழ்க்கைத்துணை குறித்த எதிர்பார்ப்பு, சிங்கக்குட்டி என்ற குறியீட்டு வடிவில் கனவில் வெளிப்பட்டுள்ளது. இக்கனவு வெறும் முன்னறிவிப்பாக மட்டுமின்றி பெண்னின் உள்மன வளர்ச்சியையும் எதிர்கால வாழ்க்கை குறித்த மனத் தயாரிப்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

**தொகுப்புரை**

உதயணகுமார காவியத்தில் இடம்பெறும் இளவரசியின் கனவு, யூங்கின் கனவுக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராயப்படும்போது ஆழமான உளவியல் அர்த்தங்களை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

யூங்கின் கருத்துப்படி மனமானது மூன்று வகையினை உள்ளடக்கியதாகும். தன்முனைப்பு, தனிமனித நனவிலி, கூட்டு நனவிலி என்பதாகும். இவ்வாறு மூவகை பகுப்புகளாகவும், மூலப்படிவம், அனிமா, அனிமஸ், நிழல் போன்ற புதிய கருத்துக்களையும் யூங் அறிமுகப்படுத்தினார் மேலும் கனவுகள், நனவிலி மனத்தின் குறியீட்டு வெளிப்பாடுகளாகும் என்றும் குறிப்பிடுகின்றார். அந்த அடிப்படையில் இளவரசியின் கனவில் இடம்பெறும் சிங்கக்குட்டி, குகை, வெள்ளிமலை, முத்துமாலை, மலர்மாலை மற்றும் நிலவுலகம் ஆகியவை வெறும் காட்சிகளாக இல்லாமல் உள்மன உலகின் குறியீடுகளாவே விளங்குகின்றன. குறிப்பாக சிங்கக்குட்டி அனிமஸ் குறியீடாகவும், மலர்மாலை மற்றும் முத்துமாலை மணவாழ்க்கை மற்றும் பெண்ணிய அடையாளத்தின் குறியீடுகளாகவும் விளக்கப்படுகின்றன.

மேலும், இக்கனவு இளவரசியின் நனவிலி மனத்தில் உருவாகியுள்ள வருங்கால வாழ்க்கை எதிர்பார்ப்பு, மனத் தயாரிப்பு மற்றும் வாழ்க்கை மாற்றம் குறித்த உளவியல் உணர்வுகளை வெளிப்படுத்துவதாகக் காணப்படுகிறது. இதன் மூலம் காவியங்களில் இடம்பெறும் கனவுகள் வெறும் கதைக்கூறுகளாகவும் வருமுன் உரைத்தல் தன்மையினை உடையதாகவும் மட்டுமன்றி, பாத்திரங்களின் உள்மன நிலைகளை வெளிப்படுத்தும் முக்கியமான உளவியல் கருவிகளாகவும் அமைகின்றன என்பது புலனாகிறது. எனவே யூங்கின் உளவியல் அணுகுமுறை, தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் கனவுக் காட்சிகளை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கான பயனுள்ள ஆய்வுமுறையாக விளங்குகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1]. சாரதாம்பாள்.செ., இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்., 2019., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., சென்னை.
[2]. இரவிச்சந்திரன் தி.கு., அம்மா வந்தாள் உளப்பகுப்பாய்வு., 2022., அலைகள் வெளியீட்டகம்., சென்னை.
[3]. இரவிச்சந்திரன் தி.கு., ஃப்ராய்ட் ,யூங், லக்கான் அறிமுகமும் அதற்கு அப்பாலும்., 2025., அடையாளம் பதிப்பகம்., திருச்சி.
[4]. ரவிசுந்தரம்., சிக்மெண்ட் ஃபிராய்டின் உளவியல் கோட்பாடுகள் ஓர் எளிய அறிமுகம்., 2022., கருப்புப் பிரதிகள்., சென்னை.
[5]. நாகூர் ரூமி., கனவுகளின் விளக்கம்., 2016., சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ்., சென்னை.
[6]. கீதாவாசன்., தமிழிலக்கியத்தில் உளவியல்., 2009., மெய்யப்பன் பதிப்பகம்., சிதம்பரம்.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work